# சுதந்திரன்

SUTANTIRAN

★ விலை சதம் 35. வ.ஆ. 2007, மாசி 27, ற.அவ்வல் 8, (10-3-76) புதன் புத்தகம் 29, இதழ் 41


## சென்னையை விட்டு வெளியேற கலைஞருக்குத் தடை!

சென்னையை விட்டு வெளியேறக் கூடாது என்று தி. மு. க. தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான கலைஞர் கருணாநிதிக்கு இந்திய மத்திய அரசு தடைவிதித்துள்ளது. இதனால் திரு. கருணாநிதி தமது வெளிமாவட்ட சுற்றுப் பயணங்களை ஒத்திவைத்துள்ளார்.

திரு; கருணாநிதியும் ஏனைய தி. மு. க. அமைச்சர்களும் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இருந்தபோதிலும், பொலிசாரின் அனுமதியுடன் சென்னைக்குள் தாம் செல்லுமிடத்தை அறிவித்து விட்டு சென்றுவர இதுவரை அனுமதி வழங்கப்பட்டு வந்தது அதே

—4-ம் பக்கம் பார்க்க

## தமிழர் கூட்டணியினரின் சட்டமறுப்புத் திட்டங்கள்!

### மே,14 15-ம் திகதிகளில் வெளியிடப்படும்!

ஏற்கெனவே தீர்மானித்தபடி தொடர்ச்சியான சட்ட மறுப்பு இயக்கமொன்றை எதிர்வரும் மே, யூன் மாதங்களில் ஆரம்பிப்பது என்று தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு மீண்டும் உறுதி செய்துள்ளது. சட்ட மறுப்பு இயக்கத்துக்கான திட்டங்களையும், அது ஆரம்பமாகும் திகதியையும் எதிர்வரும் மே 14, 15ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் தமிழர்கூட்டணியின் சிறப்பு மாநாட்டில் பகிரங்கமாக வெளியிடுவதென்றும் நடவடிக்கைக் குழுவில் முடிவு செய்யப்பட்டது.

தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழுக் கூட்டம் சென்ற 6, 7ம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்றது; கூட்டத்துக்கு முறையே முன்னாள் மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம், முன்னாள் நீதிபதி திரு. தம்பித்துரை, பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோர் தலைமை தாங்கினார்கள். இக்கூட்டத்திலேயே மேற்கண்ட வாறு முடிவுகள் எடுக்கப்பட்டன,

மே 14, 15ம் திகதிகளில் தமிழர் கூட்டணியின் சிறப்பு மாநாட்டை எங்கே நடத்துவது என்பது இன்னும் முடிவாகவில்லை. இது அடுத்த கூட்டத்தில் முடிவு செய்யப்படும்;

மே 14ம் திகதிக்கு முன்பதாக தமிழர் கூட்டணியின் தொண்டர் பதிவு வேலைகள் முடிந்து விட வேண்டுமெனவும் கூட்டணித் தீர்மானம் கூறுகிறது.

எழுத்துச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம் பேச்சுச் சுதந்திரம் ஆகியவற்றை பாதுகாக்கின்ற வகையிலும் சட்டமறுப்பு இயக்கம் அமைய வேண்டுமா என்பதை ஆராயும் படியும் கூட்டணியின் சட்ட மறுப்பு இயக்கக் குழுவை நடவடிக்கைக் குழு பணித்திருக்கிறது.

## வெளிநாடுகளின் அனுதாபத்தைத் திரட்ட தொடர்ந்து முயற்சிப்போம்!

### தேசிய அரசுப் பேரவையில் தர்மர் அறிவிப்பு!

"உலகடங்கிலும் சென்று உலக மக்களின் அபிப்பிராயத்தை எங்கள் சார்பாக நாங்கள் திருப்புவோம். அடக்கப்படும் ஏனைய மக்களுக்கு இருக்கின்ற இந்த உரிமை எங்களுக்கும் உண்டு. இதையே நாங்கள் இதுவரை செய்து வந்தோம்; இனியும் தொடர்ந்து செய்வோம்!

மேற்கண்டவாறு 4-3-76ல் தேசிய அரசுப் பேரவையில் ஒத்திவைப்புப் பிரேரணை மீது பேசிய உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் பேசியதாவது:—

"திமுகவுக்கும் தமிழர் கூட்டணிக்குமிடையே அரசியல் தொடர்பு இருப்பது உறுதிப் படுத்தப்பட்டிருப்பதாக 26-2-76ல் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பாதுகாப்பு துணை அமைச்சர் கூறியிருந்ததாக தினசரிப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருந்தது. துணையமைச்சரின் இந்த அறிக்கை தமிழ் மக்களின் உள்ளங்களில் குழப்பத்தை உண்டு பண்ணுவதாக அமைந்திருக்கிறது.

இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்குமிடையே நடைபெற்ற ஏதாவது உத்தியோகபூர்வமான கடிதத் தொடர்புகளையா அல்லது இலங்கை, இந்தியப் பத்திரிகைகளில் வெளிவந்திருந்த செய்திகளையா தனது கூற்றுக்கு ஆதாரமாக துணையமைச்சர் கொண்டுள்ளாரென்று கேட்கவிரும்புகிறேன். இலங்கை அரசுக்கும் இந்திய அரசுக்கும் இதுசம்பந்தமாக ஏதாவது உத்தியோகபூர்வமான கடிதப்பரிமாறல்கள் இருந்தால், அவற்றை இச்சபையிலே விவாதத்துக்கு சமர்ப்பிப்பாரா என்றும் அறியவிரும்புகிறேன்.

துணையமைச்சரின் அறிக்கை எங்கள் மக்கள் மனதில் தப்பெண்ணங்களை ஏற்படுத்தியுள்ளது. அதை நான் தெளிவுபடுத்தவிரும்புகிறேன்:



வேறு நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் அரசி

—4-ம் பக்கம் பார்க்க

## தி. மு. கவை அழிக்கமுடியாது என்கிறார் காங்கிரஸ்காரர்!

'கடற்கரைக்கூட்டத்தை வைத்து நாம் ஒரு கணக்கும் போட்டுவிடக்கூடாது. நாம் தி. தி. க. ஆட்சிக்கு நீடிப்புக் கொடுக்கக்கூடாது என்று தான் கேட்டோம். ஆனால் பிரதமர் அதற்கு மேலாகவே ஆட்சியை 'டிஸ்மிஸ்' செய்தார். ஆனாலும் தி. மு. க. செத்துவிடவில்லை. அது சாகாத பாம்பு. வெறும் பச்சைத் தண்ணீரை குடித்து விட்டுவேலைசெய்யும் பழைய தொண்டர்கள் இன்னும் தி. மு. க.விடம் இருக்கத் தான் செய்கிறார்கள். எனவே தி. மு. க. செத்துவிட்டது என்று கருதினால் நாம் ஏமாந்து போவோம்!"

—தமிழ் நாடு காங்கிரஸ் செயலாளர் திரு ப. நெடுமாறன் இவ்வாறு பேசியிருக்கிறார்.

## கொழும்பில் கருத்தரங்கு!

கொழும்பில் தந்தைசெல்வாவின் இல்லத்தில் நடைபெறும் இவ்வாரக் கருத்தரங்கு 10-3-76 புதன் கிழமை மாலை 6-30 மணிக்கு ஈழவேந்தன் தலைமையில் நிகழும்.

## அண்ணா நினைவை அகற்ற முயற்சி!

தமிழக அரசின் செய்திப் படங்களின் துவக்கத்தில் சென்னை கடற்கரையிலுள்ள பேரறிஞர் அண்ணாவின் நினைவு ஸ்தூபி இதுவரை காண்பிக்கப்பட்டுவந்தது. ஆனால் தமிழ் நாட்டில் மத்திய ஆட்சி ஏற்பட்ட பின்னர் அண்ணாவின் நினைவு ஸ்தூபி காண்பிப்பது கைவிடப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள அண்ணா சிலைக்கு பொருத்தப்பட்டிருந்த மின் விளக்குகளும் இப்போது அகற்றப்பட்டுவிட்டன.

## வவுனியாவில் தந்தை செல்வா பிறந்தநாள் விழா கொண்டாடப்படும்

எதிர்வரும் மார்ச் 31ம் திகதி வரும் தமிழர் கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வாவின் 79வது பிறந்த நாள் விழா இம்முறை வவுனியாவில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படவிருக்கிறது. இவ்விழாவை வவுனியாவில் கொண்டாடுவதென தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு முடிவு செய்துள்ளது.

தமிழர்கூட்டணியின் வவுனியா மாவட்டக்குழு இவ்விழாவைப் பொறுப்பேற்று சிறப்புற நடத்தவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்களும் - இவர்களும்!

இந்தியாவை ஆளும் திருமதி இந்திரா காந்தியின் ஆட்சியை—அந்த ஆட்சி செய்கின்ற காரியங்களை—தமது ஆட்சியுடனும் தமது செயல்களுடனும் ஒப்பிட்டுப்பார்த்து—தமக்குள் தாமே ஒரு மனநிறைவை பெறுவது போல இலங்கை அரசின் அமைச்சர்கள் சிலர் பேசிவருகிறார்கள்!

தாங்கள் இலங்கையில் தமிழ் மக்களுக்குச் செய்து வரும் அநீதிகளை மறைப்பதற்கு இந்திராவின் ஆட்சிக்குப் பின்னால் மறைந்து கொள்ளப்பார்க்கிறார்கள்!

இந்திரா காந்தி அங்கே செய்வதுபோலத் தாங்களும் இங்கே செய்து வருவதாகக் கூறிப் பெருமைப்பட்டுச் கொள்ளுகிறார்கள்!

இந்தியாவில் திமுகவை இந்திராகாந்தி தடைசெய்து விட்டதாகவும், அதுபோல இலங்கையிலும் தமிழர் கூட்டணியைத் தடை செய்யவேண்டும் என்றும் தேசிய அரசுப் பேரவையில் அரசியலறியாமல் கம்பளை பா.உ. திரு. ஜயரத்தின வேறு அலறியிருக்கிறார்!

இந்தியாவில் திமுக அரசு ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டதே தவிர, திமுகழகம் தடைசெய்யப்படவில்லை!

இதைக்கூடப் புரிந்துகொள்ள முடியாதபடி அதிகார வெறி திரு. ஜயரத்தினவின் கண்ணை மறைத்திருக்கிறது!

இந்தியாவுடன், தங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து பெருமைகொள்ளும் இலங்கை ஆட்சியாளரைக் கேட்கவிரும்புகிறோம்!

இந்தியாவில் இந்தி பேசாத மக்கள் மீது இந்தியை திணிக்கமாட்டேன்; இந்தி பேசாத மக்கள் இந்தியை விரும்பி ஏற்றுக்கொள்ளும் காலம் வரும்வரை இந்தியை அவர்கள் மீது புகுத்தமாட்டேன் — என்று இந்திராகாந்தி இந்தி பேசாத மக்களுக்கு உறுதியளித்து, அதைக் கடைப்பிடித்தும் வருகிறார்!

ஆனால் இங்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

சிங்களம் பேசாத—சிங்களம் தெரியாத மக்கள் மீது சிங்களத்தை வலிந்து திணிக்கிறீர்கள்!! சிங்களம் தெரியாத அரசாங்க ஊழியர்களை வேலையிலிருந்து வெளியேற்றுகிறீர்கள்!!

ஒவ்வொரு மொழிபேசும் மாநிலத்துக்கும் பூரண சுயாட்சி இல்லாவிட்டாலும் கூட—ஓரளவு வட்டார சுயாட்சி அளித்து அந்தந்த மொழி பேசும் மக்கள் தங்கள் மொழியைக் கலை, கலாசாரத்தை வளர்ப்பதற்கு — தங்கள் பகுதி நிர்வாகத்தை தங்கள் மொழியில் தாங்களே கவனிப்பதற்கு — இந்திய அரசியல் சட்டம் வழிவகுத்துள்ளது.

இதன் காரணமாகத்தான் கடந்த ஒன்பதாண்டு காலம் தமிழ் நாட்டில் திமுகழகம் ஆட்சிப் பொறுப்பிலும் இருக்க முடிந்தது.

ஆனால் இங்கே நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

நாட்டைப் பிரிக்காமல்—அதிகாரத்தைப் பிரித்து பரவலாக்கி, தமிழ் பிரதேசங்களின் உள்ளூர் நிர்வாகத்தை தமிழ்பேசும் மக்களே கவனிக்கக் கூடிய அமைப்புக்களை ஏற்படுத்தும்படி தமிழ் மக்கள் பல முறை கேட்டும் அதை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டீர்கள்!

இதே அடிப்படையில் உருவான—பிரதேச சபைகளுக்கு வழிவகுத்த பண்டா—செல்வா ஒப்பந்தத்தையும், டட்லி—செல்வா ஒப்பந்தத்தையும் நடைமுறைப்படுத்த மறுத்து விட்டீர்கள்!

கோவை மகேசன்

நாட்டைப் பிரிக்காமல்—அதிகாரத்தைப் பரவலாக்கி—தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய தமிழினத்தின் கால் நூற்றாண்டுக் கோரிக்கையாகிய சமஷ்டி அரசியல் திட்டத்தை அரசியல் நிர்ணய சபையிலே தூக்கியெறிந்து விட்டீர்கள்!

இந்தி பேசாத பகுதிகளில் திருமதி இந்திராகாந்தி திட்டமிட்டு இந்திக்காரரை கொண்டு வந்து குடியேற்றி இந்தி பேசாத மக்களின் பிரதேசத்தை ஆக்கிரமிக்கவில்லை!

அதே கொள்கையைத்தான் இங்கும் நீங்கள் பின்பற்றுவதாக நெஞ்சில் கைவைத்துச் சொல்ல உங்களால் முடியுமா?

இந்திய மொழிகள் அனைத்துக்கும் சம அந்தஸ்து வழங்குவதே தமது கொள்கையென்று கூறியிருக்கிறார் இந்திராகாந்தி!

இங்கு நீங்களோ இரண்டு மொழிகளுக்கும்—சிங்களத்துடன் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்க மறுக்கிறீர்கள்!

இந்துக்களையே பெரும்பான்மையினராகக் கொண்ட நாடாக இந்தியா இருந்தும்—அங்கு இந்திய அரசியல் சட்டமும், இந்திராகாந்தியின் அரசும் மத சார்பற்ற கொள்கையையே உறுதியாகப் பின்பற்றி வருகிறது.

இங்கு நீங்களோ பெரும்பான்மையினரின் மதமான புத்தமதத்துக்கு முக்கியமான இடத்தை அரசியல் சட்டத்தில் கொடுத்து—அதன் மூலம் மதச் சார்புள்ள அரசாக இயங்குகிறீர்கள்!

இந்திய அரசு, பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் மொழிவாரித் தரப்படுத்தல் போன்ற பாரபட்சமான கொள்கைகளை புகுத்தாமல், முற்றுமுழுதும் திறமை அடிப்படையிலேயே மாணவர்களை தெரிவு செய்கிறது.

இங்கு நீங்களோ மொழி வாரித்தரப்படுத்தலைப்புகுத்தியிருக்கிறீர்கள்! திறமை தகுதி அடிப்படையை ஏற்கமறுக்கிறீர்கள்!!

1968ம் ஆண்டு தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் அண்ணா ஆட்சியில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்குஇந்திய மத்திய அரசு பூரண ஒத்துழைப்பை நல்கியது. இந்திய ஜனாதிபதியே மாநாட்டைத் தொடக்கிவைத்தார்!

சென்னையில் மாநாடு வைக்கக்கூடாது; புதுடெல்லியில்தான்வைக்கவேண்டும் அப்போதுதான் ஆதரவு தருவோம்என்று இந்திரா அரசு தமிழ் மக்களுக்குக் கூறவில்லை!

இங்கு நீங்களோ 1974 தை மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டுக்கு ஒத்துழைப்பு தர மறுத்தீர்கள்!

மாநாட்டுக்கு வரவிருந்தபேராளர்களுக்கு நுழைவாணை வழங்கமறுத்தீர்கள்!

கொழும்பில் மாநாடு வைத்தால் தான் அரசு ஒத்துழைப்பு தருமென 'பேரம்' வேறு பேசினீர்கள்!

இறுதியில் நடந்த சம்பவங்கள் யாவும் எம்நெஞ்சைவிட்டு அகலாது!

எனவே ஆட்சியாளர்களே!

இந்திராகாந்தி அரசுக்கும்; தமிழ் நாட்டு திமுக அரசுக்கும் ஏற்பட்ட 'லடாயை' ஒரு மூடுதிரையாகக் கொண்டு — "இந்திராவைப் போலவே நாங்களும்" என்று உலகை ஏமாற்ற முயலாதீர்கள்!!

இப்படிச் செய்வதன் மூலம் தமிழ்தேசிய இனத்துக்குநீங்கள் செய்துவரும் அநீதிகளை உலகத்தின் கண்களிலிருந்தோ—இந்திய மக்களின் கண்களிலிருந்தோ ஒருபோதுமே மறைத்து விடமுடியாது!

# இலட்சியப் பயணத்தில் இளைப்பாறிய இடம்!

## கலைஞர் கருணாநிதி கடிதம்!

உடன் பிறப்பே,

தி. மு. கழகம்என்பது ஒன்பதாண்டு ஆட்சிக்காலத்தை மட்டும் தனது வரலாற்றுக் காலமாகக் கொண்டதல்ல. ஆட்சிப் பொறுப்பில் நாம் இருந்த காலம் நமது இலட்சியப் பயணத்தில் இளைப்பாறுவதற்கு நிழல் தரும் மரம் கிடைத்ததுபோல. நம்மோடு நீண்ட பயணம் நடத்தியவர்கள் அந்த நிழலில் சற்று அமர்ந்து மீண்டும் பயணத்தை நம்மோடு தொடர்ந்து நடத்துகிறார்கள். நிழலுக்கருகாமையில் நாம் வந்தபோது மட்டும் நம்மோடு இணைந்து நிழலை அனுபவித்தவர்கள் அந்த நிலை விட்டு வருவதற்கு மனமில்லாமல் நம்மையும் நிந்திப்பதின் மூலம் தாங்கள் நெடும் பயணத்திற்குத் தயங்காதவர்களைப் போலக் காட்டிக்கொள்கிறார்கள்.

உண்மையிலேயே ஏற்கனவே நீண்ட தூரம் நடந்துவந்து கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொண்டவர்கள், நிழலில் அமர்ந்தலும் இன்னும் நடக்கவேண்டிய தூரத்தை நினைத்துப் பார்த்து பெருமூச்சுவிட்டவாறு, "ஏ அப்பா! நம்மால் இனி நடக்கமுடியாது" என்று தங்கள் களைப்பைக் காட்டிக்கொள்கிறார்கள். இத்தகையவர்கள் மீது எனக்கு எனக்கு அனுதாபம் தான் பிறக்கிறது. சீற்றம் எழவில்லை,

'அதிர்ஷ்டம்' என்பதிலே எனக்கு நம்பிக்கையில்லை, கஷ்டப்படாமல் பயன்பெறுகிறவர்களுக்கு ஏற்ற சொல்லாக - அதாவது; 'அதிர்ஷ்டக்காரன்' என்ற அடைமொழியாக விளங்குகிறது.

அப்படிப்பட்ட அதிர்ஷ்டக்காரர்கள், ஒவ்வொரு கட்சியிலும் சிலபேர் தோன்றத்தான் செய்வார்கள். தொல்லைகள் வரும்போது தோன்றிய வேகத்திலேயே மறைந்துவிடுவார்கள்.

ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஒன்பதாண்டுகள் மட்டுமல்ல; நமக்கு ஏறத்தாழ ஐம்பது ஆண்டுக்கு மேற்பட்ட சரித்திரம் உண்டு.

அந்த உணர்வினை உயிராகக் கருதியவர்கள் — ஏராளம்! ஏராளம்! அவர்களின் காலடிகளுக்கெல்லாம் என்றென்றும் வணக்கம் செலுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கும்போது மாண்புமிகு ஏ. கோவிந்தசாமி அவர்கள் என்கையைப் பிடித்துக்கொண்டு ஒன்று சொன்னார். அதை நான் அடிக்கடி நினைத்துப்பார்த்து நெஞ்சம் நெகிழ்வதுண்டு.

"விவேகிகளான தளபதிகள் ஒரு கட்சிக்கு ஆயிரம்பேர் இருப்பதைவிட, விசுவாசமுள்ள தளபதிகள் ஐம்பது பேர் இருந்தால் போதும்."

என்பதுதான் அவர் சொன்ன [illegible] இருக்கிறது!

சின்னஞ்சிறு சுதந்திர நாடுகள் 7

# மோல்ரா (கோஸோ உட்பட)

மோல்ரா மத்தியதரைக் கடலில் உள்ள தீவு. ஆக 122 சதுரமைல் விஸ்தீரணமுள்ளது. அதாவது யாழ்ப்பாணத்தில் எட்டிலொரு பங்கு போன்றது. இதன் சனத்தொகை மூன்று லட்சம். மிகச் சிறந்த துறைமுகத்தைக்கொண்டது. இச் சிறு தீவில் ஒரு பல்கலைக்கழகமும் இருக்கின்றது. விவசாயம், கால் நடை வளர்ப்பு, மீன்பிடி மூலமும் பலகைத் தொழில்கள் மூலமும் வருமானம் கிடைக்கின்றது.

தேசியக் காப்புறுதித்திட்ட மூலம் மக்களுக்கு விவாகம், சுகயீனம், வேலையில்லாமை, வயோதிபம், தாரம் அலது பெற்றோரை இழந்த நிலைமை, தொழில் செய்யும் நேரம் ஏற்படும் விபத்து ஆகிய சமயங்களில் சகாயப்பணம் கிடைக்கிறது.

யாழ்ப்பாணத்திலும் மிகச் சிறிய மோல்ரா தீவு மேற்காணும் முன்னேற்ற நிலையில் உலகவரைபடத்தில் ஒரு சுதந்திர நாடாயிருக்கிறது.


**மாணவமணிகளே!**

உங்கள் சீருடைகளை மேலும் பளிச்சிடும் வெண்மையாக்க கூடுதல்நீலம் கலந்து மில்க்வைற் சலவைப் பவுடர் பாவியுங்கள்.

மேலுறைகளை அனுப்பி பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● ஒரு கருத்து

# திமுக-அதிமுக இணைப்புக்காக

அ.தி.மு.க.—தி.மு.க. இணைப்புப் பற்றிய எம்.ஜி. ஆரின் அறிக்கையை மனங்குளிர வரவேற்றவர்களில் நானும் ஒருவன். அதன் காரணமாகத்தான் "சுதந்திர"னில் அதுபற்றி மகிழ்ச்சியுடன் கருத்துத் தெரிவித்திருந்தேன். ஆனால் அந்த அறிக்கையின் பூரண விபரத்தை இந்தியப் பத்திரிகைகளிலேயே பார்த்த பின்புதான் எம் ஜி.ஆரிடம் ஏற்பட்டது கருத்து மாற்றமல்ல என்ற உண்மையை என்னால் புரிந்து கொள்ளமுடிந்தது. எம்.ஜி,ஆரின் அறிக்கை தி மு க. தொண்டர்களுக்காக விரிக்கப்பட்ட வலையே தவிர, உண்மையான இணைப்பை விரும்பி விடுத்தஅழைப்பல்ல. காமராஜரின் மறைவைப்பயன்படுத்தி இந்திரா எவ்வாறு ஒரு சிலரைத் தன்பக்கம் கவர்ந்துகொண்டாரோ அதே வழியை எம்.ஜி.ஆரும் பின்பற்ற முயன்றிருக்கிறார். பலவீனப்படுத்தப்பட்டுள்ள திமுகவிலிருந்து சிலரைக் கவருதற்கு எம்.ஜி.ஆர். இந்த உத்தியைக் கையாண்டிருக்கிறார்.

ஆனால் திரு. கருணாநிதியோ, கவரவேண்டியவர்களைக் கவரவேண்டியநேரத்திலே கவருதற்கு கையாளவேண்டிய வித்தைகளெல்லாம் நன்கு கைவந்த "கலைஞர்" ஆயிற்றே. அதனால்தான் எம். ஜி. ஆரின் பருப்பு கலைஞரிடம் அவியவில்லை. "இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை" எனக் கலைஞர் கூறிவிட்டார். கலைஞரது இந்த அறிக்கை உண்மையிலேயே இன்றைய நிலைக்கு உகந்ததுதானா? நிச்சயமாக இல்லை என்பதே எனது கருத்து. ஆனாலும் எம். ஜி. ஆருக்கு

அதுதான் பொருத்தமானது என்பது எனது கருத்து.

கொட்டும் மழையிலே குளிர்காய வந்தவர்களெல்லாம்இன்றுஉதறிக்கொண்டு தி. மு. க.வை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கின்ற சூழ் நிலையிலே அவர்களுக்காக "வாயிற்கதவினை அகலத் திறந்து வைத்து, பாய் விரித்து படுக்கை தட்டிப் போட்டுக்கொண்டு காத்திருக்கின்றார் எம். ஜி. ஆர். "தி. மு. க. தொண்டர்களுக்காக அ: தி. மு. கவின் கதவுகள் எந்நேரமும் திறந்த



புனிதத்தை நிரூபித்துவிட்டு வந்தவர்கள் என்ற பிரேமையை மக்கள் மனதிலே விதைக்க அவர்முயலுகிறார். அ. தி. மு. கவின் அத்திவாரமே 'ஊழல்' என்ற பிரசாரத்தின் அடிப்படையில் தான் அமைந்துள்ளது. எனவே தனது கட்சிக்காரர்களை ஊழல் அற்றவர்கள்" எனக் காட்டிக்கொள்ளாவிட்டால் அவரால் கட்சியே நடத்தமுடியாமல் போய்விடும். எனவே அவர் அப்படித்தான் கூறுவார் — கூற வேண்டும்.

ஆனால் எம். ஜி. ஆரைத் தவிர்த்து அ. தி. மு.கவிலுள்ள ஏனைய தலைவர்களும் ஊழல் அற்றவர்கள்தானா என எண்ணிப்பார்க்கும் போது ஏனோ வயிற்றைக் குமட்டுகிறது. ஏனென்றால் அ. தி. மு.கவிலுள்ள ஒரு சிலரைத்தவிர'பெரும்பாலானோர் அனைவரும் தி. மு. கவிலிருந்தபோது எம். ஜி.ஆராலேயே ஊழல் குற்றம் சாட்டப்பட்டவர்கள்தான்.ஏன்? இன்று எம். ஜி. ஆரின் செல்லப்பிள்ளையாகிவிட்ட "முத்தான முத்தெல்லாம்" தி.மு. கவிலிருந்தபோது முதல்தரமான ஊழல் பேர்வழியாகக் கருதப்பட்டவர் தானே. அவர்களெல்லாம் அ. தி. மு. கவிலே சேர்ந்துவிட்டதனால் புனிதர்களாகிவிட்டனர் என்று எம். ஜி. ஆரே கூறினாலும் நம்பமுடியுமா? அதற்காக எம். ஜி. ஆரைக் குறை சொல்ல முடியாது. ஆட்சிப் பீடத்தை நோக்கி நகருவதற்கு ஆட்களைச்சேர்ப்பது மிகமிக அவசியம். அதைத் தான் அவர் செய்கிறார்.

ஆனால் இதிலே சிந்திக்க வேண்டியது என்னவென்றால்! சைக்கில் செயின்களையும், மண் அடைத்த போத்தல்களையும்வைத்து'சாதனை' புரிந்த முத்துக்கள் எம். ஜி. ஆருக்கு தூய்மையானதாக இருக்கமுடியுமென்றால் முற்போக்குத் திட்டங்களைத் தீட்டி பிற்பட்டோர் நலன்

மையாயினும் சரி பிடிவாதத்தில் யார் யாருக்குசளைத்தவர்கள்? இருபகுதியாரிடமும் உள்ள பலவீனமே அதுதானே.எனவே இந்தப்பெலவீனம் களையப்படவேண்டுமானால் அது எம். ஜி.ஆரால் தான் முடியும். 'ஊழல்' என தி. மு. கவினர் மீது குற்றம் சாட்டி எம். ஜி. ஆர். பிரசாரம் செய்தாலும், அரசு பதவி நீக்கம் செய்யப்பட்டதற்கு அதுவும் ஒருகாரணமாகக்காட்டப்படுவதாலும் அரசு பதவி நீக்கம்செய்யப்பட்டதை எம். ஜி. ஆர். மகிழ்வுடன்வரவேற்பதாகக் கூறியதாலும்; கருணாநிதி

**பொ. சுயாட்சிதாசன்**

சிலையை அகற்றவேண்டுமென அ. தி. மு. கவினர் கோரி வருதாலும்; அண்மையில் மத்திய அரசுக்கு உதவுவதற்கு சர்வகட்சிக்குழு ஒன்றை அமைக்கவேண்டுமென்றும் அதில் நிச்சயமாக தி. மு. கவினருக்கு இடமளிக்கக்கூடாது என எம். ஜி. ஆர். கூறியிருப்பதாலும் இயல்பாகவே அ. தி. மு. க. (எம். ஜி. ஆர்) மீது தி. மு.க. வினருக்கு வெறுப்புணர்ச்சி இருப்பது தவிர்க்கமுடியாதது, இயற்கையானது.

இந்த நிலையிலே இணைப்புக்கான சகல நடவடிக்கைகளையும் பொறுப்புணர்வுடனும், நிதானத்துடனும் செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு காலத்தின் கரங்களாலேயே எம். ஜி. ஆர். மீது சுமத்தப் பட்டுவிட்டது. அதனைச் சரிவர அவர் நிறைவேற்றும் பட்சத்தில்; உலகமெங்கும் வாழும் தமிழர் நெஞ்சங்களிலெல்லாம் அண்ணாவுக்கு அடுத்ததாகஎம்.ஜி.ஆர் குடியேறுவார்என்பது நிச்சயம்.

இன்றைய சூழ் நிலையிலே "இணைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை" என்ற கலைஞரது அறிக்கை உகந்ததல்ல என்பது எவ்வளவு தூரம் உண்மையோ அந்தளவுக்கு உண்மைதான்; "தி. மு. க. தலைவர்கள் விசாரணைக்கு

# செயல்பட வேண்டியவர் யார்?

புரியக் கூடியமொழியிலே பதிலளிக்கவேண்டும் என்பதற்காகவே அப்படிக்கூறியிருப்பார்.

எம். ஜி. ஆர். என்ற சக்தியை இந்திராவுக்கு எதிராகப் பயன்படுத்த முடியுமானால் அதனை ஒருபோதும் கலைஞர் உதறித்தள்ள விரும்பமாட்டார் என்பதனை நம்பலாம். ஏனென்றால் எம். ஜி. ஆர். என்ற ஒருதுரும்பை வெளியே விட்டு வைத்து விளையாடுவதை 'சீட்டு'ப் புலியான கலைஞர் விரும்ப முடியாது. ஆனால் துரும்பைச்சேகரிப்பதற்கு சில பெலவீனங்கள் தடையாக இருக்கின்றன. "பாட்னரி"டமிருந்து தகுந்த நேரத்தில் உதவி கிடைக்குமானால் வெற்றியாருக்கு என்பதிலே பிரச்சினையே இல்லை. "பாட்னரி"ன் கடமையை எம். ஜி. ஆர். செய்யவேண்டும். செய்வாரா?

இந்த இடத்திலே இந்தியபத்திரிகைகளிலே வெளிவந்த எம். ஜி. ஆரின் அறிக்கையை—அதன் பூரண உள்ளடக்கத்தை ஆராயவேண்டியது அவசியமாகிறது. அ. தி. மு. கவோடு விரும்பினால் வந்து இணையலாமெனக் கூறியதன் மூலம் "வெந்த புண்ணிலே வேல்பாயும்" வகையில் எம். ஜி. ஆர். செயற்பட்டுள்ளார் எனச் சிலர் கூறக் கூடும். ஆனால் "வெந்த வீட்டிலே பிடுங்கியது அரசி" என்பார்களே

படியே இருக்கின்றன" என்ற அவரது அறிக்கை அதனைத் தான் எடுத்துக்காட்டுகிறது.

இன்று தி. மு. கவைவிட்டு வெளியேறுபவர்கள் தி. மு. கவின் உண்மையானதொண்டர்களல்ல — "வந்தான் வரத்தான்களாக" நுழைந்தவர்கள்தான் வேளியேறிக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை தி. மு. கவின் முன்னணி வீரராகவிருந்த எம். ஜி. ஆருக்குத்தெரியாதிருக்க முடியாது. இருந்தும் அவர்களுக்காக அவர் வாயில் கதவினைத் திறந்து வைத்துள்ளார் என்றால் "வெந்த வீட்டிலே பிடுங்க"க் கூடியதைப் பிடுங்கிக் கொண்டிருக்கிறார் என்றுதான் அர்த்தம்.

இதே நேரத்திலே கலைஞரின "எம். ஜி. ஆர். கனவு காண்கிறார்" என்ற அறிக்கையையும் சற்று கவனிக்க வேண்டும். அந்த அறிக்கை வெறும் தன்மான உணர்வின் சிதறலே தவிர அடிமனத்திலிருந்து வெளிவந்திருக்கமுடியாது "தி. மு. க. பொதுக்குழு தீர்மானித்து அ. தி. மு. கவோடு இணைய வந்தால் என்ற வரிகளைப் பார்க்கும் போது கலைஞரின் தன்மான அறிக்கையில் நியாயமிருப்பது தெரிகிறது. அ. தி. மு. க"வோடு" என்ற வோடில்தான் கலைஞரது சீற்றத்தின் காரணம் தங்கியுள்ளது.

"இதே நேரத்தில் எம். ஜி. ஆரின் மற்றொரு அறிக்கை



யையும் கவனத்திற்கொள்ள வேண்டும்; "தி. மு. க. தலைவர்கள் தி. மு. க. வில் சேர விரும்பினால் விசாரணைக்கு உட்படவேண்டும்" என்ற அறிக்கையின் மூலம் தனது கட்சியிலுள்ள அனைவரும் ஏதோ 'தீக்குளித்து'த் தமது

பேணிச் செயற்பட்டு "சாதனை" புரிந்த தி. மு. க. தலைமைப்பீடம் எம். ஜி. ஆரால் தூய்மையானதாகக் கருதப்படவே முடியாதா? எம். ஜி. ஆர். தூய்மையானதெனக் கருதினால்தான்தி.மு.க. வுக்கு விமோசனம் என்ற கருத்துப்பட நான் இதனை எழுதவில்லை.

எம். ஜி. ஆரைப் பொறுத்தவரை இணைப்புக்கு உள்ள ஒரே ஒரு தடையாகக் கூறப்படும் 'ஊழல்' தடை நீக்கப்படவேண்டுமென்பதற்காகவே இதனை எழுதுகின்றேன்.

தி. மு. க. பொதுச்சபை தீர்மானித்தால் ஊழல்காரர்களாக இருந்தாலென்ன, யாராகவிருந்தாலென்ன அ.தி.மு.கவிலே சேரமுடியுமென்றால் — அதை எம் ஜி ஆர். வரவேற்கிறார் என்றால் அதன் பின்பும் 'ஊழல்' தடையாக இருக்கமுடியாது. "கௌரவம்"தான் தடையாக இருக்கிறது யார் யாருடன் சேருவது என்பதுதான் பிரச்சினையாக உள்ளது என்றுதான் அர்த்தம்.

தி. மு. க. தலைமையாயினும் சரி அ. தி. மு. க. தலை

உட்பட்டு அ. தி.மு. கவோடு சேரவேண்டும்" என்ற எம். ஜி. ஆரின் வரட்டுப்பிடிவாதமும் கலைஞரிடம் சில வார்த்தைகளைக் கடனெடுத்துக் கூறுவதானால்; திராவிட சக்திகள் தம்முள் அடிபட்டுச் சிந்துகின்ற இரத்தத்தை வட நாட்டுக்குள்ள நரிகள் சில குடித்துக் குதூகலித்துக் கொண்டிருக்கின்ற இந்த சூழ்நிலையிலே; திராவிட சக்திகளின் முழுக் கவனமும் தமது பொது எதிரியான வடவர் ஆதிக்கத்துக்கு எதிராகத்திருப்பப்படவேண்டும். "மறப்போம்— மன்னிப்போம்" என்ற அண்ணாவின் உயர்ந்த பண்பாட்டின் அடிப்படையில் மறந்து மன்னித்து ஒன்றிணையத் தவறினால்; அண்ணாவின் தமிழ் நாட்டை வடநாட்டுச் சக்திகளிடமிருந்து யாராலுமே காப்பாற்றமுடியாது போய்விடும் என்பதோடு அண்ணாவின்பெயரை உச்சரிப்பதற்கே இவர்களுக்கு அருகதையும் இல்லாது போய்விடும் என்பதனை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

## 'மறப்போம்-மன்னிப்போம்'

## என்ற அண்ணாவின் கட்டளையை மறவாதீர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

சுதந்திரன்
SUTANTIRAN

# குமாரசூரியரின் "தலையீடு" பற்றி சிவானந்தன் வழக்கில் பிரஸ்தாபம்!

எதிர்க்கட்சி பா.உ.க்களின் தொகுதிகளுக்குள் புகுந்து தபாலமைச்சர் செல்லையா குமாரசூரியர் குட்டை குழப்பிவருவதாக தமிழர் கூட்டணி பா.உ.க்கள் பலமுறை குற்றம் சுமத்தியுள்ளனர். திரு. குமாரசூரியர் தான் சார்ந்துள்ள கட்சிக்குள்ளும் இதேமாதிரி குட்டை குழப்பும் பேர்வழியென்ற உண்மை இப்போது தெரியவந்துள்ளது.

சாவகச்சேரி சிறீலங்கா சுதந்திரகட்சிக்கிளை அமைப்பாளராக கடமையாற்றிய பரிஸ்டர் எம். சிவானந்தன் மீது இலஞ்சக் குற்றச்சாட்டொன்றின் பேரில் தொடரப்பட்ட வழக்கில், திரு. சிவானந்தன் நிரபராதியெனக்காணப்பட்டு அண்மையில் விடுதலைசெய்யப்பட்டார். திரு. சிவானந்தன் சென்ற ஆண்டு சனவரியில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார். அப்போது அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டதை சிறையில் வைக்கப்பட்டதாக சுதந்திரனில் தவறுதலாக வெளியிட்டிருந்தோம்.

பின்னர் திரு. சிவானந்தன் மீது வழக்கு நடைபெற்று, திரு. சிவானந்தன் நிரபராதியெனக்காணப்பட்டு விடுதலைசெய்யப்பட்டார்.

"1970ம் ஆண்டு சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்ததும், திரு. சிவானந்தன் அக்கட்சியின் சாவகச்சேரி தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்டாரென்றும், 1974ம் ஆண்டு மார்ச்சுமாதமளவில் திருமதி சிவஞானம் திரு. குமாரசூரியரின் நம்பிக்கையைப்பெற்றாரென்றும் அதன்பின் குமாரசூரியர் திருமதி. சிவஞானத்தை கட்சி அமைப்பாளராக அங்கீகரித்தார் என்றும், இதனால் திருமதி சிவஞானத்துக்கும் திரு. சிவானந்தனுக்கும் மோதல்ஏற்பட்டதென்றும், சிறீலங்கா சுதந்திரக்கட்சி சிவானந்தனையே உத்தியோகபூர்வமான அமைப்பாளராக உறுதிப்படுத்தியபோதிலும், நடைமுறையில் குமாரசூரியரின் உதவியுடன் திருமதி. சிவஞானமே அமைப்பாளராக இயங்கி வந்ததாகவும், குமாரசூரியரின் தலையீடு குறித்து சிவானந்தன் கட்சித் தலைமைக்கு எழுதியதாகவும், இவ்வழக்கு சம்பந்தமாக அளிக்கப்பட்ட தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 'கவலையும் சஞ்சலமும் போக்கும் மருந்து எது?

## மூதறிஞர் செல்வா கூறுகிறார்!

"மனிதருடைய கவலையைப் போக்கி மகிழ்ச்சியை ஏற்படுத்தக்கூடிய மருந்து இசை. சஞ்சலமுள்ள மனதில் அமைதியை ஏற்படுத்தும் தென்றல். எனக்குக் கவலையோ சஞ்சலமோ ஏற்படும் பொழுது நான் சங்கீதத்தைதேடிச் சென்று இன்பமும் அமைதியும் அடைந்துள்ளேன்."

இவ்வாறு வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் விநாயகர் ஆலயத்தில் 7—3—76 ஞாயிறு மாலை நடைபெற்ற தியாகராஜ கான சமாஜ இசை விழாவில் புல்லாங்குழல் வித்துவான் பிரம்மசிறீ மூர்த்திஐயருக்கு பொன்னுடை போர்த்தி உரையாற்றிய மூதறிஞர் செல்வா அவர்கள் குறிப்பிட்டார்.

தந்தை செல்வா அங்கு ஆற்றிய உரை வருமாறு:—

என்னை இன்றைய விழாவுக்குத் தலைமை தாங்குவதற்கும் வேணுகான வித்துவான் பிரம்மசிறி மூர்த்தி ஐயர் அவர்களுக்குப் பொன்னுடை போர்த்துவதற்கும் அழைத்திருப்பதற்கு இலங்கைத் தியாகராஜ கான சமாஜத்துக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இலங்கைத் தியாகராஜ கான சமாஜம் கடந்த இருபது ஆண்டுகளாக இயங்கி வருகின்றது. ஆண்டு தோறும் இசை விழாக்களை நடத்தி வந்திருக்கின்றது. இவ் இசைவிழாக்கள் சிலவற்றை நான் முன்பு கேட்டு மகிழ்ந்திருக்கிறேன்.

கடந்த பத்து வருடங்களாக இச்சமாஜம் இசைக் கலைஞர்களுக்குப் பொன்னுடை போர்த்திக் கௌரவித்து வந்திருக்கின்றது. இவ்வாண்டு வேணுகான வித்துவான் பிரம்மசிறி மூர்த்தி ஐயர் அவர்களுக்கு பொன்னுடை போர்திக் கௌரவிக்க முடிவு செய்திருக்கின்றனர்.

மூர்த்தி ஐயர் அவர்கள் தியாகராஜ சுவாமிகளிடம் நேரில் பாடங்கேட்டவர்களின் பரம்பரையில் வந்தவர். 1930ம் ஆண்டில் இலங்கைக்கு வந்து இங்கு இசைக் கலைக்குத் தொண்டு செய்து வந்திருக்கிறார். அவருக்குப் பொன்னுடை போர்த்தும் வாய்ப்பை எனக்கு அளித்ததில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

மனிதருடைய கவலையைப் போக்கி மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடிய மருந்து இசை. சஞ்சலமுள்ள மனதில் அமைதியை ஏற்படுத்தும் தென்றல் காற்று. எனக்குக் கவலையோ சஞ்சலமோ ஏற்படும் பொழுது சங்கீதத்தை தேடிச் சென்று இன்பமும் அமைதியும் அடைந்துள்ளேன்.

தமிழ் மக்கள் நல்ல கர்நாடக சங்கீதத்தை பயில வேண்டும். பாடுவதற்கோ, வாத்தியங்களை வாசிக்கவோ முடியாது விட்டாலும் நல்ல கர்நாடக இசையைக் கேட்டு இரசிக்கக்கூடிய ஞானத்தையாவது பெற வேண்டும். அதற்கு தியாகராஜ கான சமஜம் போன்றவை இப்படியான விழாக்களை நடத்தி உதவி செய்து வரவேண்டும்."

## வெளிநாடுகளின்

—1-ம் பக்கத் தொடர்

யல் தொடர்புகொண்டுள்ள கம்யூனிஸ்ட் கட்சியைப் போன்று — தமிழர் கூட்டணியோ இந்தியாவிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகமோ சர்வதேசிய ரீதியிலான அரசியல் கட்சிகளல்ல. தமிழர் கூட்டணியின் நடவடிக்கைகள் இலங்கைக்குள் மட்டுமே கட்டுப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக்கழகத்தின் நடவடிக்கைகள் இந்தியாவுக்குள் கட்டுப்பட்டுள்ளன. இதன் காரணமாக இந்த இரண்டு கட்சிகளிடமும் அரசியல் தொடர்பு பற்றிய கேள்வியெழுவதற்கே இடமில்லை.

எங்கள் தமிழர் கூட்டணியைப் பொறுத்தவரை நாங்கள், எங்கள் இலட்சியத்துக்கு ஆதரவாக உலக அபிப்பிராயத்தைத் திரட்ட முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்த நோக்கத்தையடைவதற்காக, எங்கள் குறைகளையும், எங்கள் இலட்சியங்களையும எடுத்து விளக்கும் வெளியிடுகளைப் பிரசுரித்து இங்குவரும்வெளிநாட்டுத் தலைவர்களுக்கும, உலகத் பத்திரிகைகளுக்கும் விநியோகித்து வருகிறோம். இலங்கைத் தமிழர்களுடன் மொழி இன, மத, கலாசாரப் பிணைப்புக்கொண்ட தமிழ் நாட்டுத் தமிழர்களும், உலகின்ஏனைய நாடுகளில்வாழும் தமிழர்களும், எமது அபிலாஷைகள் மீது அதீத அனுதாபம் காட்டுவது இயற்கையானது.

தந்தை செல்வநாயகமும், தமிழர் கூட்டணிச்செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கமும் இந்தியாசென்றிருந்தார்கள். இதுபற்றி முன்னரும் இச்சபையிலே பேசப்பட்டிருக்கிறது. இந்தியாவுக்கு அவர்கள் சென்றிருந்தபோது தி. மு. க. தலைவர்களை மாத்திரமல்ல — தமிழ் நாட்டிலுள்ள அனைத்து அரசியற்கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்தார்கள். இந்தியாவின் மூதறிஞர் ராஜாஜி, பெரியார் ஈ.வெ.ரா, அ. தி. மு. க தலைவர் எம். ஜி. ராமச்சந்திரன், இந்திரா காங்கிரஸ் பிரமுகர்கள் பக்தவச்சலம், கண்ணதாசன், பழைய காங்கிரஸ் தலைவர் காமராஜ், முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத், தமிழக ஆளுனர் கே. கே. ஷா, போன்ற பலரையும் சந்தித்துப்பேசினார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தமிழ் மக்களின் கோரிக்கைகள் மீது அனுதாபம் காட்டினர். எங்கள் இலட்சியங்களை ஆசீர்வதித்து ராஜாஜி பத்திரிகைகளில் கட்டுரைகளும் எழுதியிருக்கிறார். ஆகவே பாதுகாப்பு துணை அமைச்சர் தி. மு. கவை மட்டும் ஏன் தனியே பிரித்தெடுத்தார் என்றுகேட்கவிரும்புகிறேன்.

உதாரணமாக — வியட்னமில் வாழும் பௌத்தர்கள் இலங்கைக்கு வந்து இங்குள்ளபௌத்தர்களின் அனுதாபத்தை தங்கள் பௌத்த இலட்சியத்துக்காக திரட்டுவது சரியானதென்றால்— இலங்கைத் தமிழர்கள்வேறு நாடுகளுக்கு சென்று தங்கள் இலட்சியத்துக்கு உலக மக்களின் அனுதாபத்தைத் திரட்டுவதிலே என்ன தவறு என்று கேட்கவிரும்புகிறேன்.

இங்கு காமன்வெல்த் பாராளுமன்ற ஒன்றியத்தின் மாநாடு நடைபெற்றபோது, அதில் கலந்துகொள்ள வந்திருந்த வெளிநாட்டுத் தலைவர்களைச் சந்தித்து எங்கள் பிரச்சினையை விளங்கப்படுத்தி, அனுதாபத்தையும் தார்மீக ஆதரவையும் திரட்டினோம். இதே போல சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்தின்மாநாட்டின்போதும் நடந்துகொண்டோம்.

ஏனைய அடக்கப்பட்டுள்ள மக்களுக்கு இருக்கும் உரிமையைப்போலவே— வெளிநாட்டு அனுதாபத்தை எமது பக்கம் திருப்புவதற்கு அவர்கள மத்தியில் பிரசாரம் செய்ய எங்களுக்கும் உரிமையிருக்கிறது. இதையே இதுவரை செய்துவந்தோம். இனியும் தொடர்ந்து செய்வோம்!"

இதற்குப்பதலளித்த திரு. லக்ஸ்மன் ஜெயக்கொடி, இந்திய அரசு இது சம்பந்தமாக இலங்கை அரசுடன் தொடர்பு கொள்ளவில்லையென்றும், தாம் நடத்திய விசாரணையிலிருந்தே தி. மு. க. தமிழர் கூட்டணி அரசியல் தொடர்புதெரியவந்திருப்பதாகவும் கூறினர்.

## சென்னையைவிட்டு...

—1-ம் பக்கத் தொடர்

நேரத்தில் கருணாநிதி வெளிமாவட்டங்களுக்கும் சென்று கழகத்தோழர்களை சந்திக்க விரும்பினார். ஆனால் அவர் வெளிமாவட்டங்களுக்கு செல்வதை மத்திய அரசு தடுத்துவிட்டது. தமது வீட்டிலேயே இப்போது திரு. கருணாநிதி இருந்து வருகிறார்.

## நீதிமன்றத்தில் மனு!

தி. மு. க. ஆட்சியை மத்திய அரசு கலைத்தது சட்டபூர்வமானதல்ல என்று தீர்ப்பளிக்குமாறு கோரி டில்லி மேல் நீதிமன்றத்தில் திரு. கருணாநிதியின் சார்பில் மனு ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மனுவை ஏற்றுக்கொண்டு இதன் மீது விசாரணை நடத்துவதா இல்லையா என்பதை இம்மாதம் 22ம் திகதி டில்லி மேல் நீதிமன்றம் ஆலோசிக்கவிருக்கிறது.

இதே போன்ற ஓர் வழக்கை சென்னை மேல் நீதி மன்றத்திலும் தி. மு.க. பொதுச் செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் தொடர்ந்திருக்கிறார். தி. மு. க. ஆட்சி கவிழ்க்கப்பட்டதற்கு காரணம். இந்திரா காங்கிரசுக்கு செல்வாக்குத்தேடுவதுதான் என்றும், அரசியலில் பழிவாங்குவதுதான் ஆட்சியைக் கலைத்ததன் நோக்கம் என்றும் நெடுஞ்செழியனின் மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## தமிழர் கூட்டணி கருத்தரங்குகள்!

"வருங்காலத்தில் நமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் நம்மை இந்த நிலையில் விட்டுச்சென்றுவிட்டார்களேநம் முன்னோர் என்று நம்மைச் சபிக்காதவாறு, நம் நாடும் இனமும் மொழியும் வாழ நாம் நம்கடமையை செய்ய வேண்டும்."

—இவ்வாறு கொழும்புத்துறையில் 7-2-76ல் நடைபெற்ற தமிழர் கூட்டணி கருத்தரங்கில் பேசிய சாவகச்சேரி பா. உ. வ. ந. நவரத்தினம் குறிப்பிட்டார். திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசனும் உரையாற்றினர்.

இதே தினத்தில் மாதகலிலும் தமிழர் கூட்டணிக் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், திருமதி அமிர்தலிங்கம், வி. தர்மலிங்கம் ஆகியோருட்படப் பலர் இங்கு விளக்கம் அளித்தனர்.

## செல்வா பிறந்த நாள் கவிதைப்போட்டி!

மூதறிஞர் செல்வா அவர்களின் 79வது பிறந்த நாள் விழாவை யொட்டி தம்பிலுவில் தமிழ் இளைஞர்பேரவையினர் கவிதைப்போட்டியொன்றை நடத்துகின்றனர். முதல் மூன்று சிறந்த கவிதைகளுக்குப் பரிசுகள் வழங்குகின்றனர். 'செல்வா பிறந்திலரேல்...' என்ற அடியைக்கொண்டு கவிதையாக்கப்படவேண்டும். கவிதை வெண்பாவாகவோ, எண்சீர் விருத்தமாகவோ இருக்கலாம். முடிவு திகதி 27-3-76. கவிதைகள் அனுப்பவேண்டிய முகவரி: செயலாளர் தமிழ் இளைஞர் பேரவை, தம்பிலுவில்.

## கண்டி செல்வவிநாயகர் கொடியேற்று விழா

கண்டி கட்டுகலை ஸ்ரீபால செல்வ விநாயகர் ஆலயத்தின் வருடாந்த கொடியேற்றுவிழா இம்மாதம் 7ம் திகதி ஆரம்பமாகியது. மேற்படி ஆலயத்தின் பிரதான குரு பிரம்மஸ்ரீ இ. பிரணதார்த்திகர சிவாச்சாரியார் துவஜாரோகணம் செய்து வைத்தார் 15-3-76ல் மேற்படி ஆலயத்தின் தேர் விழா இடம் பெறும்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு -12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ இலக்கத்தில் 1976-ம் வருடம் மார்ச் மாதம் 10-ந் திகதி புதன் கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org